பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்:

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்:
முன்னிலை: திரு.S. ஞானமணி, எ.எம்.ஐ.இ.

ந.க.எண். 6272/2018/வேம3

நாள் : 18.03.2019

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017 நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், வேலூர் மண்டலம் – 1.42 ஏக்கர் ( 5746.00 ச.மீ ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational guidelines. Roc. No.13193/2017/LA2, நாள்.30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. அரசாணை எண் : 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 02.05.2018.<br>5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் Roc. No.13193/2017/LA2, நாள்.03.01.2019 மற்றும் 07.01.2019<br>6. மனுதாரர் திரு. பிரபு அவர்களின் கடிதம் நாள். 15.11.2018.<br>7. அரசாணை எண் : 21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 05.02.2019. |

-----

**உத்திரவு:**

பார்வை (1 ) மற்றும் (2) –ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3) மற்றும் (5)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (6)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், மேல்முடியனூர் ஊராட்சி/கிராமம், சர்வே எண்: 151/2–ல் 1.42 ஏக்கர் ( 5746.00 ச.மீ ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி ந. வ. / ந. ஊ. து. இ. (வே.ம.)வரன்முறைப்படுத்துதல் எண் : **196 (R) / 2019** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : 5746.00 ச.மீ (அ) 61855.00 ச.அடி
(அ) 1.42 ஏக்கர்

...1...புத்தகம் 2022ம் வருடம் 8925
ஆவணம் 22 தாள்களைக் கொண்டது.
22 வது தாள் பதிவு அலுவலர்

மனைப்பிரிவில் அமைந்துள்ள மொத்த
மனைகளின் எண்ணிக்கை : 43

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை : 5

விற்கப்பட்ட மனை எண்கள் : 28–32

விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு : 6060.00 ச.அடி

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 38

விற்கப்படாத மனைகளின் எண்கள் : 1–27, 33–43

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 44656.00 ச.அடி

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை : 39

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 4569.75 ச.அடி - 10.23 %
(மனை எண்கள்: 1 4)

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம் :

1) பரிசீலனைக் கட்டணம்

புத்தகம் 2020 ம் வருடம் 895
ஆவணம் 32 தாள்களைக் கொண்டது
23 வது தாள்
பதிவு அலுவலர்

| | |
|---|---|
| இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO DTCP/L/06850066/2017, Dt: 14.11.2018 –ன் படி விற்கப்படாத 38 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் தலா ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ.19,000/– ONLINE –ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் ( ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம் (ரூபாயில் ) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம் (ரூபாயில் ) |
|---|---|---|---|

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| 0217 Urban Development -60 Other Urban Development Scheme-- 800 Other receipts AT Receipts under Regularization charges of Unapproved Layouts and Plots -DTCP 27 Non Taxation Fees – 30 Regularizations"<br>DPC 0217 60 800 AT 2730. | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண். ----------------

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

03.11.2018-க்கு பின்னர் கூராய்வு கட்டணம் செலுத்தப்படும் மனைகளுக்கு பார்வை 7-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

பார்வை 1, 2 மற்றும் 7-ல் கட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.13.10.2017-ல் விதி எண்.7 (g) (ii) -ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1 புத்தகம் 2020 ம் வருடம் 895 | |
| ஆவணம் 32 தாள்களைக் கொண்டது. | |
| 24 வது தாள் | பதிவு அலுவலர் |

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
வேலூர் மண்டலம்.

8/2/25

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மற்றும் உத்தரவு நகல்.

புதுப்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி. ஏ.எஸ்.இலட்சுமி.,

ந.க.ஆ4/1121/2019 நாள் : . 02 .2020

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு வரன் முறைப்படுத்துதல் திட்டம் 2017-2018 - புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் - மேல்முடியனூர் ஊராட்சி சர்வே எண்: 151/2-ல் - 61855 சதுரடி - அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்துதல் - மனை வரன்முறைபடுத்தி - பதிவு செய்ய அனுமதித்து - உத்திரவிடல் - சார்பு.

பார்வை : 1). நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களின் செயல்முறைக் கடிதம ந.க.எண்: 6272/2018/வேம3 நாள்: 18.03.2019

2). மேல்முடியனூர் ஊராட்சி தீர்மான எண்:21, நாள்:07.02.2020

*******

**உத்திரவு :**

புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த மேல்முடியனூர் ஊராட்சி சர்வே எண்:151/2-ல், 2எச்3பி, 138/2எ3, 140/4(ப) மற்றும் 5-ல், 15499.33 சதுரடியில் அமைந்துள்ள (மனை எண்கள்: 1 முதல் 27, 33 முதல் 43) முப்பத்து எட்டு காலியமனைகளை, திரு.பிரபு என்பவர் வரன்முறைப்படுத்த கோரியுள்ளார். பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களின் செயல்முறைப்படி, ஒரு சதுர மீட்டருக்கு வரன்முறை கட்டணம் ரூ.124650/-ம் வளர்ச்சி கட்டணம் ரூ.104000/-ம் மேல்முடியனூர் கிராம ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மனைகளை பதிவு செய்து கொள்ள இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

14/2/2020

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
புதுப்பாளையம்.

14/02/2020

பெறுநர்:
திரு.பிரபு,
22எ, மெயின் ரோடு,
காந்தி நகர்,
திருவண்ணாமலை.

நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: சார்பதிவாளர், செங்கம் பதிவு செய்யும் பொருட்டு.

நகல்: ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.